ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

"சிரேஷ்டனாயுள்ளவன் எதெதைச் செய்கிறானோ, அதைத்தான் இதர ஜனங்கள் செய்வார்கள். அவன் எதைப் பிரமாணமெனக் கொள்ளுவானோ, அதைத்தான் மற்றவரும் அனுஸரிப்பார்கள்" என்று கீதையில் பகவான் சொல்லியிருப்பது அனுபவத்திற்கு ஒத்ததாயிருப்பதாக முன்னோர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். தற்காலத்தில் அப்படியிருப்பதாகத் தெரியவில்லை. சிரேஷ்டர்கள் என்று கருதப்படும் நம் முன்னோர்கள் சிரேயஸ்ஸுக்கு ஸாதனமென்று அனுஷ்டித்துவந்ததைத்தற்காலத்தியவர்கள் அனுஷ்டிக்கவில்லை. அம்மட்டோடில்லை. முன்னோர்கள் நடத்திவந்தது முழுமையும் தவறுதலாகவே இருப்பதாக நிச்சயித்து பலபேர்களுக்கு போதித்து அவைகளையெல்லாம் மாற்றித் தங்களிஷ்டம்போல் புதிது புதிதாக நடத்திவருகிறார்கள். அவை பிரமாணத்திற்கொத்ததாயில்லையேயென்று வைதிகர்சொல்ல ஆரம்பித்தால் உடனே வைதிகரை தூஷிக்கத் தலைப்பட்டுவிடுகிறார்கள். இப்படி இவர்கள் வைதிகர்களைத் தூஷிப்பதை யாரும் கேழ்க்கக்கூடாதாம். சிலர் வைதிக ஸித்தாந்தத்தை கெடுத்துவிடுகிறார்களேயென்று வைதிகர் சொன்னால் வைதிகர் அவர்களை தூஷித்துவிட்டதாகக் கடுஞ்சினங்கொள்ளுகிறார்கள். வேத தூஷணையும், வைதிக தூஷணையும் ஒவ்வொரு நாளிலும் பேப்பர்களில் வருவதைப் பார்த்தால் நடுநிலையிலிருப்பவர்களுக்கு ஸஹிக்கமுடியாததாயிருக்கிறது. வைதிகர்களுக்குத் தங்களது வர்ணாசிரம தர்மத்தை வியவஸ்தை செய்துகொள்ள அதிகாரமில்லையாம். அவைதிகர் சொற்படி வைதிகர் கேழ்க்க வேண்டுமாம். இதென்ன காலவித்தியாஸம். பிராமணர்களது விவாஹாதி தர்மங்களை பிராம்மணரல்லாதார் தீர்மானம் செய்கிறதாம். இது விந்தையிலும் விந்தை. இவ்வளவும் பெரியோர் அங்கீகரித்த சுருதி ஸ்மிருதி முதலியவைகளைப் பிரமாணமாக நம்பாத காரணத்தாலும், ஒருவாறு பிரமாணமாக நம்பினாலும் அவைகளுக்கு நியாயவிபரீதமாகப் பொருள்படுத்துவதாலும் வந்த கேடு. வேதார்த்தத்தை உள்ளபடி தெரிந்துகொள்ள மீமாம்ஸா நியாயங்களும், புராணேதிஹாஸாதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆதியோடந்தமாய் குருமுகமாகப் படித்தவர்களுக்குத்தான் வேதார்த்தம் உள்ளபடி புலப்படும். அதன் மூலமாய் விநயாதி குணங்களும், ஸதாசாரமும் ஸித்திக்கும். அத்தகைய குணம் வாய்ந்தவர்கள் பிறரை தூஷிக்கமாட்டார்கள். ஸ்வமதத்தை இரக்ஷித்துக்கொள்ளுவதற்காக பிரர் விரோதமாய்க் கூறுவதைக் கண்டிப்பார்கள். அது தூஷணையாகாது. இக்கருத்து பிரம்மசூத்திரம் 2-வது அத்தியாயத்தின் அவதாரிகையில் பாஷ்யகாரர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதைப் பார்த்து யாவரும் சாந்தமாயிருந்து வேதார்த்தத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ ஆவணி-௴ ௨௧௨

ஒற்றுமை.

நமதுதேசஜனங்கள்நெடுநாளாய் ஒற்றுமையென்னுமுயர்ந்த குணத்தினின்றும் பிரிந்துவிட்டார்கள். சிலவருஷங்களுக்கு முன் எல்லா ஜனங்களிடத்திலும் ஒற்றுமை குன்றியிருப்பினும், பிதா, புத்திரன், குரு, சிஷ்யன், பர்த்தா, பாரியை, அரசன், பிரஜை இவர்கள் போன்ற தனிப்பட்டதோர் ஸம்பந்தமுடையவர்களிடத்திலாவது சிறிது காணப்பட்டு வந்தது. தற்காலத்தில் அவர்களிடத்திலும் ஒற்றுமை விலகிவிட்டது. பிதிருபக்தியுள்ள புத்திரனும், புத்திரஸ்னேகமுள்ள பிதாவும் காணப்படுவது அரிதாகிவிட்டது. அங்ஙனமே குருசிஷ்யாதிகளிடமும் உண்டாகிவிட்டது. குருவை நாடிச் செல்லுகின்ற சிஷ்யனே இல்லை. சிஷ்யனைத்தேடித்தேடி சிபார்சு மூலமாகவும் கிடைக்காமல் திரிகின்ற குருமார்கள் பலர் தோன்றுங்காலம் நேர்ந்துவிட்டது. அப்படியிருக்க வித்தைகளின் பயன் எங்கே கிடைக்கப்போகின்றது. குடும்பகாரியமொத்தாப்போல் நடப்பதற்கு தம்பதிகளுக்கு அன்னியோன்யப்ரீதியே காரணமாகும். அந்தப் பிரீதியும் அவர்களுக்கொற்றுமையில்லாமையால் இல்லாமற் போய்விட்டது. அல்ப ஸ்வல்பம் ஒட்டிக்கொண்டிருப்பதை பிரௌடாவிவாஹரக்ஷகக்காரர்கள் துடைத்துவிடப் பார்க்கிறார்கள். ஆகவே இனி குடும்பகாரியந்தான் எப்படி நடந்தேறுமோ? ஆனால்இப்படிப் பொதுவாய் எல்லா ஜனங்களிடத்திலும் ஒற்றுமை குலைந்துவிட்டதென்று சொல்லக்கூடவில்லை. இந்துதேசத்திலும் மகம்மதியர், சுதேசகிறஸ்தவர் முதலாயினோர் எவ்வளவு ஒற்றுமையாயிருக்கிறார்கள். நமது இந்துக்கள் மாத்திரந்தான் காலதோஷத்தால் ஒற்றுமையற்றவர்களாய்விட்டார்கள். தேசாந்தரங்களிற் பார்ப்போமாகில் ஒற்றுமை நிரம்பியிருக்கிறது. இந்துக்கள், அதிலும் வர்ணாச்ரம தர்மிகள், அதிலும்

பிராம்மணர்கள் ஒற்றுமையை அடியோடிழந்தமையால் நேரிட்டிருக்கும் கெடுதிகள் பல. அதாவது— அனேகர் அன்னியமதஸ்தரானார்கள். அன்னியர்களது நடை, உடை, பாவனைகளை அனுஸரித்து விட்டார்கள். அதனால் அன்னியதேசத்தார் சாக்குகளை வாங்கி அவர்களுக்கு ஜீவனத்தையுண்டுபண்ணி தமது ஜீவனத்தின் கெடுதியைத் தேடிக்கொண்டார்கள். நமது ஸனாதன தர்மங்களை அன்னிய நாட்டார் எடுத்தோதும்படி விட்டுவிட்டார்கள். நமது ஸனாதன தர்மிகளுக்கு ஒன்றுந்தெரியாதென்று அலக்ஷியம் செய்துவிட்டார்கள் சிறந்த நமது புராதனக் கல்வியைப் பிறர் நாசஞ்செய்ய, ஏனென்று கேட்கவும் கெதியின்றி வாயில்லாப் பூச்சிகளானார்கள். அவனவனது குடும்ப உரிமையையும் அடைவதற்கு அதிருஷ்டமில்லாதவர்களாகிவிட்டார்கள். இன்னும் எவ்வளவோ ஒற்றுமையின்மையினால் நேர்ந்தன. ஆகையால் ஓ! இந்துக்களே !! நமது ஜாதி மத வித்தியாசங்களைப் பொதுக்காரியங்களில் காட்டாதீர்கள். ஒரே கட்டாயிருங்கள். ஒற்றுமை வீணாகாது. ஒருகாரியத்திலில்லாவிடினும் மற்றொரு காரியத்திலாவது நயத்தையுண்டுபண்ணும். நம்மிடத்தில் அன்னியருக்கு மதிப்பும் அச்சமும் இருக்கும். பிரகிருதத்தில் விவாஹவிஷயத்தில் ஒற்றுமையில்லாமல் விட்டதின் பயனை ஒவ்வொரு ஸனாதன தர்மியும் அனுபவித்துக்கூறுவாயில் கஷ்டப்படுகிறார்கள். வேதத்தை அன்னியர் பிரமாணமில்லையென்றால் ஸனாதனதர்மியும்சொல்லிவிடலாமா? ஸனாதனதர்மத்தை அழிக்கப் பார்ப்பவர்களுக்கு ஜாதிப்பெயரும், மதப்பற்றும்என்னபயனைத்தரும். பிராம்மணனென்றபெயரையும், வைதிகமதப்பெயரையும் வைத்துக்கொண்டு சிலர், வேதத்திற்கு விரோதமாகவும் நடத்தத் துணிந்துவிடுவார்களானால், இதைவிட வேறு கெடுதி என்ன இருக்கிறது. அதனால் அவரவர்களும் வேதப் பிராம்மண்யத்தை நம்பி ஸ்வதர்மத்தையனுஷ்டித்து, ஒற்றுமையாயிருந்து இம்மை மறுமைப் பயன்களைப்பெறுவார்களாக

சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(442-வது பக்கத்தொடர்ச்சி.)

53. ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதாளின் நிர்யாணம்.

இவ்விதம் நமது தீக்ஷிதாள் உலகத்தில் வர்ணாசிரமதர்மங்களை நடத்தியும், ஏனையோரையும் அவ்விதமே நெறிதவறாமல் நடத்தி வைத்தும், சிவகாமிநேசனை அனுக்ஷணமும் மனதைவிட்டு அகலாமல் இருக்கும்படி தியானத்தால் கட்டுப்படுத்தியும் வரும்போது ஒரு தினம் தான் ஸ்ரீ நடராஜனிடம் ஐக்கியம் பெறும் சமயத்தை உணர்ந்து கொண்டார். உணர்ந்துகொண்டு நித்தியநைமித்திக கன்மாக்களை அன்றைய தினமும் குறைவறச் செய்து, பகவானை ஆராதித்து தர்ப்பங்களைக்கொண்டுவரச்செய்து அவைகளைப்பாவனமான பூமியில் பரத்தி அத்தர்ப்பசயனத்தில் சயனித்து, பக்கத்தில் பக்திசிரத்தையோடு நிற்கும் நீலகண்ட தீக்ஷிதர் முதலான புத்திரர்களை அனுக்கிரஹம் செய்து யோகத்தால் ஆத்மஜ்யோதிஸ்ஸை பரமேசுவரனிடம் லயப்படுத்துவதற்கு எண்ணங்கொண்டார்.

அத்தருணத்தில் அவர்களின் பிரிவினையை ஸஹிக்க முடியாமல் பித்ருபக்தி மேலிட்ட நீலகண்டதீக்ஷிதர் அம்மஹானை நோக்கி கருணைவள்ளலே! பகவானுடைய அம்சம் நிறைந்த தகப்பனே! ஸத்குருவே (जीवतोर्वाक्यकरणात्) என்றபடி தாங்களிட்ட கட்டளையைக் கூடியவரை செய்திருக்கிறேன், தாங்கள் இன்னும் ஏதாகிலும் எனக்குக் கட்டளையிட்டால் அதையும் செய்து முடித்து ஜன்மஸாபல்யம் பெற விரும்புகிறேன். ஆஞ்ஞையிடவேண்டும் என்று வேண்டினர்.

அப்போது தீக்ஷிதாள் கூறியதாவது:—

चिदम्बरमिदं पुरं प्रथितमेव पुण्यस्थलं
सुताश्च विनयोज्ज्वलाः सुकृतयश्च काश्चित्कृताः ।
वयांसि मम सप्ततेरुपरि नैव भोगे स्पृहा
न किञ्चिदहमर्थये शिवपदं दिदृक्षे परम् ॥

“சிதம்பரம் என்னும் இந்நகரமோ பிரஸித்தமான புண்ணியஸ்தலம். பிள்ளைகளான நீங்களும் வணக்கம் முதலான ஸகலநற்

குணங்களும் பொருந்தியுள்ளீர்கள். பகவானுடைய பெருமையைப் புகட்டும் சிறந்த கிரந்தங்களும் சிற்சில செய்யப்பட்டிருக்கின்றன. வயதோ எனக்கு எழுபதிற்குமேல் ஆய்விட்டது. இனி எனக்கு அனுபவிக்கவேண்டியவற்றில் ஒன்றிலும் அவா இல்லை. ஆதலால் எனக்கு வேண்டியது ஏது என்று நான் ஒன்றையும் விரும்பிக் கேட்கவில்லை. சிவபெருமானின் நித்தியாதிசயமான பதத்தையே நாடவிரும்புகிறேன்" என்றனர்.

அப்போது, அம்மஹானின் பிரிவினையால் ஏற்படும் சோகத்தால், முகம் வாட, கண்ணீர் ததும்ப, பக்கத்தில் நெருங்கிவரும், தன் தம்பியான ஆச்சான் தீக்ஷிதரின் பேரனான நீலகண்டன் என்ற சிறுவனை அருகில் அழைத்து, தீக்ஷிதாள் அனுக்கிரகஞ் செய்தார்.

உடனே அம்மஹானின் ஆஞ்ஞையால், புஸ்தககோசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தேவீமாஹாத்ம்யம், ரகுவம்சம் இவ்விரண்டும் சிஷ்யர்களால் கொண்டுவரப்பட்டன. தீக்ஷிதாள் அவைகளை அச்சிறுவனிடம் அநுக்கிரஹித்துக்கொடுத்து, தன்னால் ஆராதிக்கப்பட்ட ஐந்துஸ்படிக லிங்கங்களில் ஒன்றையும் அருள் புரிந்து கொடுத்தனர்.

தவிரவும் பாலனே! நீ பாண்டியநாடு சென்று, அந்நாட்டில் முதல் மந்திரியாய் இருந்து, மீனாக்ஷிசுந்தரேச்வரருடைய கைங்கர்யங்களைச்செவ்வென நடத்தி, சிவதர்மங்களை ஸ்தாபனஞ்செய் என்று ஆஞ்ஞையிட்டார்.

தீக்ஷிதாள் ஆராதித்த பாக்கி நான்கு லிங்கங்களில் ஒன்று ஸ்ரீ காஞ்சிபுரியிலும், ஒன்று பொன்னம்பலத்திலும், இரண்டு ஹாலாஸ்ய பிராந்தத்திலும் இருப்பதாகப் பெரியோர் சொல்கின்றனர்.

ஒன்று மதுரையில் ஆராதிக்கப்படுகிறது. அந்த ஸ்படிக லிங்கத்தைப் பார்த்து ஆனந்திக்கும்படியான பாக்கியம் ஒரு சமயம் எனக்கு நேர்ந்தது. சின்ன தீக்ஷிதர் என்று பிரசித்திபெற்ற நீலகண்ட தீக்ஷிதாளால் ஆராதிக்கப்பட்ட லிங்கம், கோடைநெல்லூரில் அவ்வம்சத்தினரால் ஆராதிக்கப்படுகிறது.

இவ்வாறு புத்திராதிகள் யாவரையும் உசிதப்படி ஆசீர்வதித்து விநாயகர் என்று நாமகரணம் பூண்ட தீக்ஷிதாள் யோகபலத்தால் ஸுஷும்நா நாடி வழியாக தன் தேஜஸ்ஸை வெளிப்படுத்தி நடராஜனிடம் ஐக்கியப்படுத்துவதற்குத் தியானித்தார்.

அப்போது அற்புதமான ஒரு ஜ்யோதிஸ்ஸு அவர்களுக்குத் தோன்றிற்று. அப்போது தீக்ஷிதாள்

आभातिहाटकसभानटपादपद्म
ज्योतिर्मयो मनसि नस्तरुणारुणोऽयम् ।

என்று சொல்லினர். "என் மனதில் பொன்னம்பலத்தாசனுடைய சரணாவிந்த ஜ்யோதிர்வடிவமான பாலஸூர்யன் (இளரவி) என் மனதில் பிரகாசிக்கின்றது" என்ற கருத்தடங்கிய பூர்வார்த்தத்தை சொன்னதும் உபாதியடைந்தார்கள்.

உடனே பக்கத்திலிருந்தமுத்தகுமாரனை நீலகண்டதீக்ஷிதர்

नूनं जरामरणघोरपिशाचकीर्णा संसारमोहरजनी विरतिं प्रयाता ।

"மூப்பு இறப்புகளாகிற கொடூரமானபேயால் வ்யாபித்த ஸம்ஸாரமாகிற மோஹராத்திரியானது நிச்சமாய் ஒழிவடைந்துவிட்டது" என்று உத்தரார்த்தத்தைப் பூர்த்தி செய்தார்.

வெகுகாலமாய் பகவானிடம் ஈடுபட்டு முன்பு ஒரு சமயம் ஊமத்தங்காயை அறைத்துச் சாப்பிட்டு आत्मार्पण த்தை இயற்றித் தன் மனதின் பக்குவ நிலையையுணர்ந்த இந்த அவதார புருஷனின் மஹிமையை எடுத்துரைக்க எவ்வாறு என்போன்ற அற்ப புத்தியுள்ளவனால் இயலும்,

அதே ஆத்மார்ப்பணத்தில்,

सर्वं क्षेप्तुं प्रभवति जनः संसृतिप्राप्तभागः
चेतःश्वासप्रशमसमये त्वत्पदाब्जे निधाय ।
तस्मिन्काले यदि मम मनो नाथ दोषत्रयार्तं
प्रज्ञाहीनं पुरहर भवेत्तत्कथं मे घटेत ॥

"நாதனான சிவபெருமானே ! அனேக ஆயிரங்குற்றங்கள் செய்திருந்தாலும் பச்சாத்தாபங்கொண்டு மரணசமயத்தில்உம்மைநினைத்தால் தாங்கள் அவை யாவற்றையும் மன்னித்துக் காத்து அருள் புரிவீர்கள். அக்காலத்தில் உமது திருவடியில் மனதை ஜனங்

கள் நிலைகிறுத்தினுல், ஸம்ஸார வாழ்க்கையாலாகிய துரிதங்கள் யாவற்றையும் போக்கிக்கொள்ளத்திறமை பெறுவார்கள். அக்காலத்திலும் ஆத்யாத்மிகம் முதலான தோஷங்களால் பிடிக்கப்பட்ட மனம், பிரஞ்ஞையற்றுப்போனுல், ஹே புராராதியே! அம்மனதை அத்தருணத்தில் உம்மிடம் எங்ஙனம் என்னுல் அர்ப்பிக்கக்கூடும். ஒருக்காலும் முடியாது" என்று கூறியுள்ளார்.

மேலும் இவ்வாறு நிரூபித்து, அதற்கு அடுத்த செய்யுளால் பிரஞ்ஞை ஒரு சமயம் இருந்தாலும், பிராணோத்கிரமண காலத்தில் பந்துக்கள் தன்னைச் சூழ்ந்து கண்ணீர் விட்டலறும்போது, தங்களிடத்தில் மனதை நிலைநிறுத்த உறுதியாகவே இயலாது என்று நிச்சயித்து அடுத்த ச்லோகத்தால் இத்தருணத்திலேயே மனதை அர்ப்பணஞ் செய்கிறேன் என்று நிரூபித்துள்ளார்.

अद्यैव त्वत्पदनलिनयोरर्पयाम्यन्तरात्म
नात्मानं मे सहपरिकरैरद्रिकन्याधिनाथ ।
नाहं बोद्धुं शिव तव पदं न क्रियायोगचर्याः
कर्तुं शक्नोम्यनितरगतिः केवलं त्वां प्रपद्ये ॥

'அந்தராத்மாவாய் விளங்கும் சிவபெருமானே! எனது ஆத்மாவை புலன்கள், புத்திரர்கள், மித்திரர்கள், களத்திரம் முதலான பரிவாரங்களுடன் உமது தாமரைத்திருவடிகளில் இப்போதே அர்ப்பணஞ்செய்கின்றேன். மலைமகளின் காதலனே! யான் உமது பதத்தையறிந்துகொள்வதற்கு கன்மாக்களையும் யோகத்தையும் அனுட்டிக்கச் சக்திவாய்ந்தவனல்லன். ஆகையால் வேறு கதியற்றுத் தங்களையே சரணம்புகுகிறேன்.'

இவ்வாறு ஆத்மார்ப்பணத்தில் நிரூபித்த ஸ்ரீமான் அப்பய்ய தீட்சிதசிகாமணிகள் இப்போது பூர்ணமான மனோநிலையோடேயே, நடராஜனை தியானித்து யோகபலத்தால் ஸுஷும்னநாடி வழியாய் தனது தேஜஸ்ஸை வெளியாக்கினுர்கள்.

तासां मूर्धानमभिनिस्सृतैका । तयोर्ध्वमायन्नमृतत्वमेति ॥

என்று சாந்தோக்கியப்படி "அவர்களின் மூர்த்தாவின் வழியாய் ஆத்மஜ்யோதிஸ்ஸு வெளிப்படவே" அக்காலத்தில் பொன்னம்பலத்தில் தீட்சிதாள்ரூபமாகவே தோன்றின அத்தேஜஸ்ஸைக் கண்டு வியந்து கர்ப்பூரம் எடுக்க அர்ச்சகாளான தீட்சிதாள் முற்

படவே யாவரும் ஆச்சர்யப்படும்படி பிரகாசித்துக்கொண்டு அந்த ஜ்யோதிஸ்ஸு ஸ்ரீசிவகாமிநேசனனநடராஜனிடம்ஐக்கியமாயிற்று.

இந்த விருத்தாந்தத்தை அக்காலத்து விருத்தர்களின் பரம்பரையாய் அறிந்துவருகின்ற ஸ்ரீநடராஜபூஜா துரந்தரர்களான தீட்சிதாளும் அவ்வம்சத்தினரும் சொல்கின்றனர்.

இந்த பாரதபூமி இவ்விதமான புண்ணியபுருஷாளைப்பெற்று அவ்வப்போது தர்மங்களை நிலைக்கச்செய்துகொள்கிறுள். இம்மாதிரியான மஹான்கள் அவ்வப்போது அவதரித்து தர்மஸ்தாபனம் செய்யாதவரையில் நமது மதத்திற்கே ஜலாஞ்ஜலி விடவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். இப்போது மறுபடியும் பல துன்மதச்சூழ்ச்சிகள் நிகழ்கின்றன என்று ஆஸ்திகர்கள் நடுங்காமல் ஊக்கத்துடன் ஆர்யதர்மத்தின்வாயிலாக மேன்மேலும் தர்மங்களை நிலைநாட்டவேண்டும். இச்சரித்திரநாயகருக்குப் பிள்ளைகள் மூவரில் மூத்தவரான நீலகண்டதீட்சிதாளைப்பற்றி அக்காலத்து வித்வான்களின் அபிநந்தன ச்லோகம்

कलाकलापवादलोलनीलकण्ठयज्वनः
करोति कोऽपरो बुधः पुरोऽधरोष्ठचालनम् ।
हरस्समौनमुद्रया हरिस्तु योगमुद्रया
जरा भरोऽब्जभूर्जयत्युपायतोऽत्र कुत्रचित् ॥

"சாஸ்திரஸமூஹங்களில் வாதஞ்செய்வதற்கு நீலகண்டதீட்சிதாள் அவாவோடு முற்படும்போது அவர்களின்முன்பு வேறு எந்த வித்வான் கீழ் உதட்டை அசைப்பான். பிரசித்தரான அந்த ஹரன்மௌனமுத்திரையையும், ஹரியோவெனில் யோகமுத்திரையையும் அவலம்பித்தனர். வயதுமுதிர்ந்த கமலயோனியான பிரம்மதேவனே உபாயத்தால் ஓர் சிறுவிஷயத்தில் எங்கேயோ ஒரு மூலையில் வெல்வதற்குப் பாடுபடுகிறார்" என்று அதன் கருத்து.

54. முடிவுரை.

இம்மஹானுடைய சரித்திரம் வடதேயங்களில் அதிகமாய்ப் பரவியிருக்கின்றது. பின்பும் அவைகளைத் தெரிந்து மற்றொரு சந்தர்ப்பத்தில் எழுத ஆவலுள்ளவனுயிருக்கிறேன். இப்போது தீட்சிதாளின் சரித்திரத்தை ஏற்றுக்கொண்டு வெளிப்படுத்துவதற்கு இடங்கொடுத்த ஆர்யதர்மத்தின் பத்திராதிபதிகளுக்கு

எனது மனப்பூர்வமான வந்தனத்தையளிக்கிறேன். இம்மஹானுடைய சரித்திரம் இவ்வம்சத்தில் உதித்து தீட்சிதாளுக்குச் சமமாகவே கீர்த்திபெற்ற மன்னார்குடி தியாகராஜதீட்சிதாளால் தீட்சிதவம்சாபரணம் என்ற கிரந்தத்தில் விரிவாகக் காணலாம். அந்நூல் வெளியாகாதது அவ்வம்சத்தாருக்கு ஒரு குறைவு என்றே எனது திண்ணம். எவ்வாருவது அந்நூலை யாராவது தனிகர் ஏற்றுக்கொண்டு சீக்கிரம் அச்சிட்டால் அது ஆஸ்திகர்களுக்குப்பெரியபயனையளிக்கும் என்று உறுதியாகக்கூறுகிறேன்.

இம்மஹானுடைய பிள்ளைகள் மூவரில் மூத்தவர் நீலகண்ட தீக்ஷிதர் என்று முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் பரம்பரையில் ஜனிக்கும் பாக்கியம்பெற்ற நான், அடியிற்கண்ட ச்லோகத்தின் மூலமாக அந்த பரம்பரையில் தீக்ஷிதாள் தொடங்கி பத்தாவது முறையாகிறேன்.

यत्प्रपितामहपिता साक्षादप्पय्ययज्वनो नप्ता ।
तत्सूनुसूनुरित्थं सुब्रह्मण्यः स्वमाशयं ब्रूते ॥

1. ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதர்
2. நீலகண்டதீக்ஷிதர்
3. யஜ்ஞேச்வரதீக்ஷிதர்
4. நீலகண்டதீட்சிதர்
5. யஜ்ஞேச்வரதீட்சிதர்
6. ராமநாததீக்ஷிதர்
7. வெங்கடசுப்பிரமணியதீக்ஷிதர்
8. யஜ்ஞேச்வரதீட்சிதர்
9. வைத்தியநாததீட்சிதர்
10. சுப்பிரமணியதீட்சிதர்.

மூன்ருவதாகக் கூறப்பட்ட யஜ்ஞேச்வரதீட்சிதருக்கு இளமையிலேயே பஞ்சாக்ஷரத்தை உபதேசிப்பதற்கு அவரது பிதாவான நீலகண்டதீட்சிதாள் திருவையாற்றில் ஐப்யேச்வரசபையில் உபதேசிக்கத்தீர்மானித்து ஐப்யேச்வரர் ஸன்னிதானத்தில் பிள்ளையை இருக்கச்செய்து தேங்காய்முதலான பூஜாதிரவியங்களைக் கொண்டுவரச்சென்றபோது ஐப்யேச்வரரே அத்தருணம் லக்னம் நெருங்கிவிட்டதால் பிதாபோல்தோன்றி பஞ்சாக்ஷரமுபதேசித்து மறைந்தார்.

பிறகு பூஜாதிரவியங்களோடு வந்த தகப்பனர் உபதேசிக்க முயலவே பிள்ளை அவரைப்பார்த்து இப்போதுதானே உபதேசித்தீர் என்று ஈச்வரன் உபதேசித்தபடி தியானச்லோகாதிகளோடு அம்மந்திரத்தைத் தெளிவாய் ஜபித்தார். அப்போது ஆச்சர்யங்கொண்ட பிதா இது ஐப்யேசனின் திருவிளையாட்டு என்று

உறுதிகொண்டார். பரமேச்வரனல் உபதேசிக்கப்பட்ட அந்த தியானச்லோகம் அவர்கள் பரம்பரையைத்தவிர மற்ற பரம்பரையில் வேறுகவே இருக்கின்றது.

இந்நூலை எழுதப்புகுந்த எனது பெரிய தகப்பனர் விசேஷமாய் பூர்வமீமாம்ஸையில் தேர்ச்சிபெற்று மற்ற சாஸ்திரங்களிலும் தெளிவான நல்லறிவுபெற்று ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளாய் இப்போது விளக்கும் மஹாஸ்வாமிகளுக்கு முந்தினவரின் முந்தினவர்களான மஹாஸ்வாமிகளின் ஸபையில் பிரதமபண்டிதராய் இருந்தவர்கள்.

ஸர்வேச்வரரான பரமேச்வரன் இவ்விதம் தனது அம்சத்தால் மஹான்களைப் புவியில் அவதரிக்கச்செய்து தர்மஸ்தாபனஞ் செய்கிறர்என்பதைப்பற்றி நான் அதிகமாக எழுதத்தேவையில்லை.

தற்போது கருணைவள்ளலான ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக விளங்கும் மஹாஸ்வாமிகள் அதிபால்யத்திலேயே உத்தமஸ்தானம் பெற்று புண்ணியதீர்த்தயாத்திரை வியாஜமாக லோகஸஞ்சாரஞ் செய்துகொண்டு மூர்க்கர்களும் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு இனிய தேன்மொழிகளால் தர்மோபதேசஞ் செய்துகொண்டும், வேதசாஸ்திரங்களை அங்கங்கு ஸ்தாபித்துக்கொண்டும், தாடங்கப்ரதிஷ்டை முதலான ஈச்வரகைங்கர்யங்களை நடத்திக்கொண்டும், வித்வான்களைக்கொண்டு பற்பல வழிகளால் கிராமங்கள்தோறும் நமது தர்மத்தைப் பரவச்செய்துகொண்டும், புதிதுபுதிதாகத் தங்கள் மனோநோக்கம்போல் வர்ணுசிரமதர்மங்களைக் கெடுக்க முன்வருகின்றவர்களைத்தடுக்கச்செய்துகொண்டும், உபவாஸம், சந்திரமௌளீச்வராராதனம் முதலான தபோபலத்தால் ஜ்வலித்துக்கொண்டும் பலவிதத்தாலும் பாடுபட்டு ஸன்மார்க்கத்தை ஸ்தாபனஞ்செய்வதையறியாதார் யார் உளர் ?

முன்பு மதுரையில் மஹாஸ்வாமிகள் அருளிச்செய்த இனிய மொழிகளை யான் எழுதுவதற்கு ஆர்யதர்மம் இடந்தந்தது.

இப்போதும் எனது கூடஸ்தரான அப்பய்யதீக்ஷிதாளின் சரித்திரத்தை வெளியிடப் போதுமான ஸாவகாசம் கொடுத்ததற்கு அம்மஹாஸ்வாமிகளின் பூர்ணனுக்கிரஹமே மூலகாரணம்

என்று அநுகரணமும் அம்மஹானின் திருவடிகளையே பணிந்து கொண்டு இச்சரித்திரத்தை மஹாஸ்வாமிகளிடம் அர்ப்பணஞ் செய்யலானேன்.

ஆகையால் நமது மஹாஸ்வாமிகள் இத்துறையில் என்மனம் ஈடுபட்டிருப்பதை ஏற்றுக்கொண்டு மேன்மேலும் என்னை அநுக்கிரஹித்து அருள்புரிவாராக.

இங்ஙனம்
K. V. சுப்பிரமணியசாஸ்திரீ,
ஆச்சார்யாளின் தாஸன்.

உபாகர்மாவில் ஆசார்யபக்தி.

(நெரிஞ்சிப்பேட்டை.)

அபார கருணாநிதிகளாயும் ஸனாதனதர்மஸம்ரக்ஷணார்த்தம் அவதரித்த ஸாக்ஷாத் ஜகதீசஸ்வரூபிகளாயும் விளங்காநின்ற ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீமதாசார்யஸ்வாமிகளவர்கள் சென்ற பிரபவ-வரு சித்திரை-மீ இவ்வூருக்கு விஜயம் செய்து நாஸ்திகதையை வெறட்டி ஆஸ்திகதையைப் புகட்டும் அமிருதமயமான உபன்யாஸங்களால் ஸகல ஜனங்களையும் பரமானந்தபரிதாளாயும் பக்திபரவசாளாயும் செய்வித்து ஸ்ரீமத் தர்மசிவாசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் ஒருவாரம் தங்கியிருந்து திவ்ய ஸந்தர்சனாதிகளால் அனுக்ரஹித்த விசேஷத்தால் ஆசார்யபக்தியில் ஈடுபட்ட இவ்வூர் மஹாஜனங்கள் वर्षासु ध्रुवशीलः ஸன்யாஸிகள் வர்ஷாகாலத்தில் ஓரே இடத்தில் தங்கியிருக்கவேண்டும் என்ற சுருதிவாக்கியத்தின்படி சாதுர்மாஸ்யஸங்கல்பத்தைச் செய்துகொண்டு ததங்கமாய்ச் செய்யப்படும் ஸ்ரீவியாஸபூஜாவிஷயமான பத்திரிகையை ஸ்ரீஸன்னிதானத்திலிருந்து வரப்பெற்று, வியாஸபூஜையை அங்கமாகக்கொண்ட உபாகர்மதினத்தில் ஸ்ரீமதாசார்யானுக்ரஹத்தையும் சந்திரமௌளீச்வராதி தேவதானுக்ரஹத்தையும் பெறவேண்டிய நிமித்தம் சக்திக்கும் உத்ஸாஹத்திற்கும் தகுந்தபடி அவரவர்களால் கொடுக்கப்படும் திரவியத்தை ஸ்ரீ சந்திரமௌளீச்வராதி தேவதா பூஜாதிரவ்யார்த்தம் ஸமர்ப்பித்துக்கொள்வதென்றும், இதுபோல் ஒவ்வொரு கிராமத்திலும்

நடந்துகொள்வார்களேயானல் 'பலதுளி பெருவெள்ளம்' என்ற நியாயப்படி சாதுர்மாஸ்யகாலத்தில் லோகக்ஷேமார்த்தம் அநுஷ்டிக்கப்படும் வியாஸபூஜை, வித்வத்ஸதஸ், பிராமணஸந்தர்ப்பணம் முதலான கைங்கர்யங்களுக்குப் போதுமானதாக ஏற்படுமென்றும் ஸங்கல்பித்துக்கொண்டு அதுசமயம் வசூலான சிறிய தொகையை ஸந்நிதானத்தில் ஸமர்ப்பித்துக்கொண்டார்கள் என்ற விஷயத்தை அவ்வருஷமே ஆர்யதர்மமூலமாய்த் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

"आरम्भशूराः खलु दाक्षिणात्याः"

என்ற அபவாதத்திற்கு ஆளாகாதவர்களான இவ்வூர் மஹாஜனங்கள் பிரதிவருஷமும் ஸங்கல்பித்தபிரகாரம் உபாகர்மதினத்தில் பக்திபுரஸ்ஸரம் கொடுக்கப்படும் திரவியத்தை வசூலித்து அனுப்பிக்கொண்டுவருவதுபோல் இவ்வருஷத்திலும் அடியிற்கண்ட விவரப்படி வசூலான ரூ. 13—8—0. பதிமூன்றரை ரூபாயையும் ஸ்ரீசந்திரமௌளீச்வராதி தேவதாபூஜாதிரவியார்த்தம் அனுப்பிக்கொண்டு ஸ்ரீமதாசார்யாநுக்ரஹத்திற்கும் தேவதாநுக்ரஹத்திற்கும்பாத்ரரானவிஷயம் மிகவும் சிலாகிக்கத்தகுந்ததாயிருக்கிறது.

अण्वप्युपहृतं भक्तैः प्रेम्णा भूर्येव मे भवेत् ।
भूर्यप्यभक्तोपहृतं न मे तोषाय कल्पते ॥

குசேலஸ்வாமியானவர் கிருஷ்ணபரமாத்மாவை தரிசிக்கப்போன ஸமயத்தில் கந்தத்துணியில் முடியப்பட்டதாயும் நன்ருய் இடிக்கப்படாததால் அரிசிபோன்றும் ஸ்வல்பமாயும் இருக்கிற அவலை லக்ஷ்மீபதியான பிரபு ஸ்ரீ பகவானிடத்தில் எப்படிக்கொடுப்பதென்று லஜ்ஜைப்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில் கிருஷ்ணபரமாத்மாவானவர் பக்தர்களால் பிரியத்துடன் கொடுக்கப்பட்ட ஸ்வல்பமான வஸ்துவும் எனக்கு அதிகமானதாகவே ஆகிறது. பக்தியில்லாதவர்களால் கொடுக்கப்பட்ட அதிகமான வஸ்துவும் என்னுடைய ஸந்தோஷத்தின்பொருட்டு ஆகிறதில்லையென்று தனது அமிருதமயமான சொற்களால் லஜ்ஜையைத் தெளியவைத்துத் தானாகவே அவலை வாங்கி புஜித்து அனுக்ரஹித்ததுபோல பகவத்ஸ்வரூபிகளான ஸ்ரீமதாசார்யாளும் இச்சிறிய தொகையை விசேஷஸந்தோஷத்துடன் பூஜாதிரவியார்த்தம் அங்கீகரித்து, இக்கிராமமஹாஜனங்களின் பக்தியையும் இக்கைங்கர்யத்தின் மேன்மையையும் விசேஷமாய்ப்புகழ்ந்து அனுக்ரஹித்திருக்கிற ஸ்ரீமுகத்தைப்

பார்த்தால், யாவரும் இக்கைங்கர்யத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதையும் அதன்மூலம் ஸ்ரீமதாசார்யானுக்ர ஹத்தையும் இஹலோக பரலோக போகபாக்யங்களையும் அடைய வேண்டுமென்பதையும் வற்புறுத்திக் கூறச்செய்கிறது. ஆகையால் இக்கைங்கர்யத்தில் ஆஸ்திகர்கள் அனைவரும் ஈடுபட்டு இஷ்டார்த்தஸித்திகளைப் பெறவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

வசூலான தொகை விவரம்,

ஸ்ரீமத் தர்மசிவாசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம் ரூ. 3—0—0, ஷை மடம் ஏஜண்டு V. ஸ்ரீனிவாஸய்யங்கார் 2—0—0, N. K. வெங்கடாமணசாஸ்திரிகள் 1—0—0, K. N. வெங்கடராமய்யர் 2—0—0, ஸாமவேதி வெங்கடராமய்யர் 1—0—0, சேஷய்யங்கார் 1—0—0, சுப்பிரமணிய குருக்கள் 1—0—0, அம்மாப்பேட்டை பாங்கு சுந்தரேசய்யர் 0—8—0, ஷை வெங்கடராமய்யர் 0—8—0, ராமகிருஷ்ணகுருக்கள் 0—4—0, லக்ஷ்மீநாராயணய்யர் 0—4—0, V. வெங்கடராமய்யர் 0—4—0, A. சுந்திரமய்யர் 0—4—0, V. ஸ்ரீனிவாஸய்யர் 0—4—0, K. S. நரஸிம்மய்யர் 0—4—0. ஆகமொத்தம் ரூ. 13—8—0.

N. K. வேங்கடரமணசாஸ்திரி.

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

சோழமன்னர்களின் சரித்திரம்.

(௬௯௪-வது பக்கத்தொடர்ச்சி)

16 அத்தியாயம்

அச்சோழமன்னன் பிருஹதீசுவரருக்கும், தேவீ, ஸ்கந்தர், கணேசர், ஸோமாஸ்கந்தர், விருஷபம், சண்டீ, முதலியவர்களுக்கும் கும்பாபிஷேகத்தை சுபமான ஸ்திர முஹூர்த்தத்தில் செய்யத்தொடங்கினான். 119-தங்கக்குடங்கள். வெள்ளிக்குடங்கள், இவைகளிலுள்ள தீர்த்தங்களாலும், ஆயிரம் சங்ககூர்ச்சத் தண்ணீர்களாலும், நவதான்ய தீர்த்தங்களாலும், ஐந்து மாத்தளிர்களுடன்கூடிய மஹாநதிநதங்களின் புண்யஜலங்களாலும். ஆயிரம் தாமிரக்குடங்களிலுள்ள தீர்த்தங்களாலும், நவரத்தின தீர்த்தங்களாலும், பிரும்மகூர்ச்சங்களாலும், பஞ்சகவ்யத்தினாலும், லக்ஷம் குடங்களிலுள்ள பாற்களாலும், நூறுகுடங்களிலுள்ள தயிர்

நெய், தேன் இவைகளாலும், ஐந்து மலைகளாகக் குவித்துள்ள, சர்க்கரைகளாலும். இரண்டு லக்ஷம் தேங்காய்களிலுள்ள இளநீர்களாலும், ஐந்துலக்ஷம் வாழைப்பழங்கள், இரண்டு லக்ஷம் பலாப்பழங்கள், இரண்டுலக்ஷம் மாம்பழங்கள், பத்துலக்ஷம் எலுமிச்சம் பழங்கள், ஆயிரங்குடங்களிலுள்ள கருப்பஞ்சாறு, லக்ஷங்குடங்களிலுள்ள சந்தனக்குழம்பு, ஐந்து லக்ஷங்குடங்களிலுள்ள சுத்த ஜலங்கள் இவைகளாலும்,

सेचयद्रुद्रसूक्तैश्च चतुर्वेदोद्भवैर्द्विजैः ।

மூன்று வேதங்களைச் சார்ந்தவர்தணர்களால் ருத்திரஸூக்த ஜபத்துடன் பிருஹதீசுவரருக்கு அபிஷேகம் செய்வித்தான்.

சிவார்ச்சகர்களைக்கொண்டு ரக்ஷாஹோமங்கள் செய்யச் செய்தான். பிருஹதீசருக்கு வஸ்திரங்கள், ஆபரணங்கள், தங்கமயமான கண்மலர்கள், திருநீற்றுப்பட்டை, ஆயிரம் படங்களை விரித்துக்கொண்டுள்ளதோருபமான நாக்குடையுமாகிய இவைகளைத் தயாரித்தளித்தான். அவ்வாறே தேவீ, ஸ்கந்தர், கணேசர், நடேசர், ஸோமாஸ்கந்தர், ஆகிய இவர்களையும் வஸ்திராபரணங்களால் அலங்கரித்தான். ஆலயம் முழுவதும் லக்ஷக்கணக்கான நெய்விளக்கிட்டான். ஆங்காங்கு ஏராளமாக வாசனை புகையை பரவச்செய்தான். ஸபரிவாரமான பிருஹதீசுவரருக்கு பலவித பக்ஷ்ய போஜ்யங்களுடன் குன்றுகள்போன்றவன்னக் குவியல்களையும், அதன் பின் பல தாம்பூலங்களையும் நிவேதனம் செய்து நீராஜனம் காட்டச் செய்தான்.

பலவித மங்களவாத்தியங்கள், பணிப்பெண்களினடல்கள், குழல், வீணை, மிருதங்கம், துந்துபி, காஹளம், முதலியவைகளின் இனிய த்வனிகள், குடை, சாமரங்கள், விசிறிகள், அழகிய கொடிகள், கண்ணாடிகள், முதலியவைகளுடன் ஷோடசோபசார பூஜையையும் செய்வித்து. மஹாபிஷேக விதிப்படிச்சங்கரனை அர்ச்சித்தான். பிறகு அறுசுவையுடன் கோடிபிராம்மண போஜனம் செய்வித்தான். அவ்வந்தணர்களுக்கு வஸ்திரங்கள், புஷ்பம் தட்சிணை, உதகபாத்திரம், முதலியவுமளித்தான். அச் சோழ மன்னன் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிய சிவார்ச்சகர்கள் ஜபப்பிராமணர்கள் தொண்டுசெய்தவர்கள் ஆகிய இவர்களை முக்கியமாகத் தனதான்யங்கள், பூமி, பசுக்கள், வஸ்திரங்கள், ஆபர

ணங்கள், சந்தனம், தாம்பூலம். முதலியன அளித்துத் திருப்தி பெறச்செய்தான். மற்றமுள்ள அந்தணர்களை தட்சிணைதாம்பூலங்களாற் சந்தோஷிக்கச் செய்தான். ஒரு மண்டலம் வரையில் பிருஹதீசுவரருக்கு ஒவ்வொரு நாளும் முவ்வேளையும் லக்ஷபில்வார்ச்சனையையும், வெண்டாமரை, செந்தாமரை கருநெய்தல் முதலிய பூக்களாலும் அர்ச்சனைகள் செய்வித்தான்.

कृत्वा ताम्रमयं पट्टं पूजार्थं बृहदीशितुः ।
दशग्रामान्ददौ भूपः शूलमङ्गलपूर्वगान् ॥

பிருஹதீசரின் பூஜையை நடத்திவருவதின் நிமித்தம் தாமிரப்பட்டயம் ஏற்படுத்தி வைத்து சூலமங்கலம் முதலிய பத்து கிராமங்களையும் அளித்தான். நடர்கள், நாத்தகர்கள், பணிப்பெண்கள், ஊழியக்காரர்கள், ஆகிய இவர்களையும் ஏற்பாடுசெய்தான். தினமும் பஞ்சாமிருதாபிஷேகம் நடைபெறுமாறு ஆயிரம் பசுக்களையும் கோயிலுக்கு விடுத்தனன். மாதப்பிறப்பு, பிரதோஷம், ஸோமவாரம், பர்வாக்கள் ஆகிய இவைகளில் விசேஷ பூஜையை இருமடங்காகச் செய்துவர உத்திரவிட்டான்.

17 அத்தியாயம்

ஸூதர்:— சித்திரை விழாவையும், ஏகாதசியில் இரதோத்ஸவத்தையும், அதற்கடுத்த துவாதசியன்று தீர்த்தங்கொடுத்தலையும் நடத்திவந்தான். கொடியேற்றம் முதல் பதினெட்டு தினங்கள் மஹோத்ஸவம் நடத்தப்பெற்றது. முதல் மூன்று தினங்களில் விநாயகருக்கும், கந்தவேளுக்கும் உற்சவத்தை நடத்தியும் கல்யாண சுந்திரரை வெளிவீதிப் பிரதக்ஷிணம் செய்துவரச்செய்தும் திருவிழாவை அழகுபெறச்செய்தான்.

तथाऽष्टध्वजपूर्वं हि दिक्षु दिक्षु शिवालये ।
कारयामासनृपतिः... ... ... ॥

அவ்வாறச்சிவாலயத்திலொவ்வொருதிக்குகளிலும் அஷ்டகொடி ஏற்றித்திருவிழாவை நடத்திவரச்செய்தான்.

யானைவாஹனம், குதிரைவாஹனம், பூதவாஹனம், முதலியவைகளைச் செய்தான். எட்டுச் சக்கரங்களுடனும், நாலுபக்கங்களிலும் மணிகளுடனும், ஓர் கொடியினுலும் அழகிய ஓர் ரதத்தை (தேர்) பிருஹதீசருக்கும், அம்மாதிரியே மற்றொன்றை பிருஹன்நாயகிக்கும் தயார் செய்து அவைகளிலேற்றி வாத்தியகோஷங்க

ளுடன் ஊர்வலம் வரச்செய்தான். துவாதசியன்று சிவகங்கை யில் தீர்த்தமும், கொடுக்கச்செய்தான். அப்பொழுது அச்சோழ மன்னனும், ஆசானுகிய ஹாதத்தரும் மற்றுமுள்ள எல்லா ஜனங் களும் அச்சிவகங்கையில் ஸ்னானம் செய்தனர். சரீரம் முழுவதுமுள்ள குஷ்டம் நீங்கிய அரசன் களங்கமற்ற சந்திரன்போல் விளங்கினுன். அரசன் மனைவியுடன் ஸ்னானம் செய்து தனம் தான்யங்கள் பசுக்களின் கூட்டம் இவைகளை முறைதவறாது பக்தியுடன் அந்தணர்களுக்கு அளித்தான். சிவஞானப்படி அங்கு ஸ்ரீ கங்காதேவி தோன்றித்தன்னஞ்சலியிலோர் விசுவனுதலிங் கத்தைக் கொணர்ந்து அரசனிடம் காட்டினுள். மின்னர்கொடி போல் பிரகாசிப்பவளும் சர்வாபரண பூஷிதையுமானவக்கங்கை எல்லா ஜனங்களுங் கேட்டுக்கொண்டிருக்கையில் அரசனை நோக் கிக் கூறலானுள்.

கங்காதேவி:- ஸ்ரீபிருஹதீசரின் வடகரையிலுள்ள சிவகங்கை என்னும் இத்தீர்த்தத்தில் எல்லாமனிதர்களுடையவும் பாவத்தை போக்கக்கருதி இங்கு ஓர் அம்சத்துடன் வசித்து வருகிறேன்.

स्नानपानेन सर्वेषां तृप्तिदास्यमृतोपमा ।

அமிர்தத்திற்கொப்பாகவுள்ள நான் ஸ்னானபானுதிகளுக்குதவுவ தால் யாவருக்கும் சந்தோஷமளிக்கிறேன். இச்சிவகங்கையில் மூழ்கி பிருஹதீசரை யார் தர்சிக்கின்றனரோ அவர்கள் பாவங்க ளினின்றும் விடுபட்டுக் கைலையிற் சந்தோஷத்துடன் வசிப்பார் கள். சந்திர ஸூரிய கிரணங்கள், பிரதோஷம், ஸோமவாரம், அமாவாஸ்யை, பௌர்ணமி, முதலிய புண்ணிய பர்வாக்களில் இச்சிவகங்கையில் முழுகுவோர் என் பிரவாஹத்தில் ஸ்னானம் செய்வதால் ஏற்படும் பயனையடைவார்கள். பிறகு பிருஹதீசரை தரிசிப்பின் காசியில் விசுவனுதரை தரிசிப்பதால் ஏற்படும் பயனை அடைவர். முன்பு கங்கையிலிருந்த இச்சிவலிங்கத்தை இந்த சிவகங்கையின் அக்னி மூலையில் ஸ்தாபனம் செய்கிறேன்.

இவ்வாறு கூறி அவ்விடத்தில் அந்த லிங்கத்தை ஸ்தாபனம் செய்து மறைந்தாள். சிவகங்கைக் கரையில் அதனை அரசன்பூஜித் தான் இன்றும் அல்லிங்கம் அவ்விடத்திலேயே காணப்படுகிறது.

(தொடரும்)

N. வைத்தியனுதசாஸ்திரி,

ஸரஸ்வதிமஹால், தஞ்சை.